தொகையை சில இடங்களில் சில வருடங்களில் நாம் கூட்டிப்போடுகிறோம். ஆக அவர்கள் சொல்கிற அளவுக்கு ஒட்டுமொத்தமாக கூடி இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஏதோ தவறான தகவல் என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும் அதை உடனடியாக இன்றைக்கே நம்முடைய மின்சாரத் துறையினுடைய அதிகாரிகளிடம் ஆய்வு செய்து எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்து நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட இடங்களிலே இருக்கக்கூடிய குறைகளை நீங்கள் நேரடியாக எழுதித் தரவேண்டும். நான் அப்போதுதான் சம்பந்தபட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கமுடியும். இதுபோன்ற பிரச்சினைகள் இருந்தால் நீங்கள் எழுதி தாருங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 329, திருமதி. ரெ. சியாமளா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

329–

கோவில்பட்டி தொகுதியில் நிட்சேப நதியின் குறுக்கே பாலம் கட்டுதல்

***16293–திருமதி ரெ. சியாமளா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கோவில்பட்டி தொகுதியைச் சேர்ந்த திருவேங்கடத்திற்கு அருகில் நிட்சேப நதியின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திட்டங்கள் ஏதும் இல்லை.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சேர்ந்த திருவேங்கடத்திற்கு அருகில் நிட்சேப நதியின் குறுக்கே பாலம் கட்டினால் சிதம்பரனார் மாவட்டம், நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், காமராஜர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெறுவார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த

ஆண்டிலாவது அதைக் கட்டித் தர ஆவனசெய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டிருக்கின்ற பாலமானது குருவிக்குளம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த திருவேங்கடம் ஆவுடையார்புரம் சாலை. அந்த சாலையிலே கிலோமீட்டர் 1/2-லே கட்டப்படவேண்டிய பாலம். இது ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலை. அதிலே நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக எந்த திட்டமும் இல்லாத காரணத்தினால்தான் நான் இல்லை என்று தெரிவித்தேன். இந்த பாலத்தை அமைப்பதற்கு ஏறத்தாழ 15 லட்சம ரூபாய் தேவை என்று எஸ்டிமேட் போட்டிருக்கின்றார்கள். அது தவிர இந்த சாலை மேம்பாடு செய்வதற்கு ஒரு 7 லட்சம், ஆகமொத்தம் 22 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆக ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலைக்காக 22 லட்சம் ரூபாய் நெடுஞ்சாலைத் துறையிலே செலவு செய்வதற்கு வழியில்லை. சில இடங்களிலே கிராமசாலைகள் திட்டத்தின் கீழே சாலைகளைப் போடுகின்றபோது இப்படிப்பட்ட திட்டங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த ஆண்டு இந்த திட்டங்கள் இந்த பணியில் இடம்பெறவில்லை. எதிர்காலத்திலே இந்த சாலையை ஆய்வு செய்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற கிராமங்களுக்கு, எத்தனை கிராமங்கள் இருக்கின்றன என்பதையும் பரிசீலனை செய்து எதிர்காலத்திலே நிதிநிலைமைக்கு ஏற்ப இதுசம்பந்தமாக அரசு பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவேங்கடத்தில் இருந்து ஆலங்குளத்திலுள்ள தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலைக்கு இங்கிருந்து அதிகமான தொழிலாளர்கள் செல்கின்றனர். மேற்படி அந்தப் பாலம் கட்டப்படுமானால் அங்கு செல்வதற்கு சுமார் 15 கிலோமீட்டர் தூரம் குறையும். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது அரசு அடுத்த ஆண்டிலாவது ஆவன செய்யுமா என்பதை அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான் தொகுதிக்கு ஒரு பாலம் என்கின்ற ஒரு புதிய திட்டத்தை கொண்டு வந்து செயல்படுத்தினோம். இன்னும் நிறைய, 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட பாலங்கள் கட்ட வேண்டுமென்று தான் உலக வங்கிக்கு பரிந்துரை செய்து, 860 கோடி ரூபாயிலே ஒரு திட்டத்தை இந்த ஆண்டுகூட மானியக் கோரிக்கையிலே

தெரிவித்திருந்தோம். தமிழ்நாடு முழுவதும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. எல்லா தொகுதிகளிலும் பாலங்கள கட்ட வேண்டிய பிரச்சினை இருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையைத் தவிர ஊராட்சி ஒன்றிய சாலைகளிலும் பாலங்கள் கட்ட வேண்டியிருக்கிறது. அங்கேயும் நிதி இல்லை. நெடுஞ்சாலைத் துறையிலேயும் அதற்கான வாய்ப்பு இல்லை. ஏற்கெனவே இருக்கின்ற சாலைகளை பராமரிப்பதற்கும் பாலங்களைக் கட்டுவதற்குமே போதுமான நிதி இல்லாத காரணத்தினாலே எவ்வளவு நிதியை புரட்சித் தலைவி 3 மடங்கு, 4 மடங்கு ஒதுக்கி தந்தாலும் கூட இன்னும் போதவில்லை. ஆகவேதான், உலக வங்கியை நாடியிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே எல்லா பாலங்களையும் ஒரே நேரத்திலே கட்டுவதற்கு இயலாது. இருக்கின்ற தேவைகளின் அடிப்படையில் முன்னுரிமை கொடுத்து பாலங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். அதுதான் நான் ஏற்கெனவே தெரிவித்தபடி இதை ஆய்வு செய்து எதிர்காலத்திலே எப்படி இதை பரிசீலிக்கலாம் என்பதை நிதிநிலைக்கு ஏற்ப செய்யலாம் என்று தெரிவித்தேன். அந்த அடிப்படையில்தான் மறுபடியும் நான் சொல்கிறேன். நிதிநிலைக்கு ஏற்ப, அடுத்த ஆண்டு இது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலாறு எங்களுடைய மாவட்ட எல்லையிலே அதுவும் குறிப்பாக என்னுடைய தொகுதியின் கடைசியாக இருக்கின்ற அப்பைநாயக்கன்பட்டி என்ற ஊருக்கு அருகிலே அது கட்டப்பட வேண்டும். இது நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. காமராஜர் மாவட்டத்தின் கடைசி எல்லையாக இருக்கின்ற அந்த அப்பைநாயக்கன்பட்டி கிராமம் வரை இன்றையதினம் நெடுஞ்சாலைத் துறையிலே அந்தச் சாலை உள்ளது. அதை ஒரு கிலோமீட்டர் தூரம் நீட்டினாலே இந்த பாலம் கண்டிப்பாக மிக முக்கியமான பாலமாக இருக்கும். இது இரண்டு மாவட்டத்தையும் சேர்க்கும் ஒரு முக்கியமான பாலமாக கருதப்படுவதால் இங்கு இருக்கின்ற அனைத்துப் பகுதி மக்களும், குறிப்பாக நெல்லை மாவட்ட மக்களும், காமராஜர் மாவட்ட பகுதி மக்களும் இந்தப் பாலத்தை அதிகமாக விரும்புகிறார்கள். எனவேதான், புரட்சித் தலைவி ஆட்சியிலே இதை நெடுஞ்சாலைத் துறையிலே சேர்த்துக்கொண்டு ரூரல் ரோட்ஸ்-லே இந்தப் பாலத்தை சேர்த்து செய்யலாமா என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஊராட்சி ஒன்றிய சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறை எடுத்துச் செய்வதற்கு வாய்ப்புகள் இல்லை. ஏதாவது பகுதி-2 திட்டத்தின்கீழ்தான் சில பாலங்களை எடுக்கிறோம். சாலைகள் போடுகிறோம். அதிலும்கூட குறிப்பாக கிராம சாலைகளை எடுக்கிறபோது, பஸ்ரூட் ஸ்கீம், ஸ்பெசல் காம்போனன்ட் பிளான், அதுபோல ரூரல் ரோட்ஸ் என்று மூன்று விதமாக வைத்து இந்தச் சாலைகளைப் போடுகிறோம். ஆனால் இந்த ஊராட்சி ஒன்றிய சாலைகளிலே பொதுவாக இந்த ரூரல் ரோட்ஸ்-ஐ நாம் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அப்படி எடுக்கிறபோது ஒரு வருடத்திற்கு ஒரு பகுதிக்கு 2 சாலைகள், 3 சாலைகள்தான் எடுக்க முடிகிறது. இதைவிட மோசமாக இருக்கின்ற பகுதிகளிலேதான் எடுக்கிறார்கள். ஆகவே, அதை மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்து, நம்முடைய துறைக்கு வந்து, அதை நாம் முடிவு செய்ய லிஸ்ட் எடுக்கிறோம். ஆகவே, வருடத்திற்கு நிறைய தேவை இருக்கிறது. இருந்தாலும் நான் ஏற்கெனவே தெரிவித்ததைபோல, அது காமராஜர் மாவட்டமாக இருக்கலாம். திரு. பாலகங்காதரன் அவர்களுடைய தொகுதியாக கூட இருக்கலாம், அல்லது நம்முடைய திருமதி. சியாமளா தொகுதியாக கூட இருக்கலாம். இருக்கிறது நிதிப் பிரச்சினைதான். இதில் யாருடைய தொகுதி என்பது அல்ல. எல்லா தொகுதிகளுக்கும் பாலங்கள் கட்ட வேண்டும். சாலைகள் போட வேண்டும் என்பதுதான் நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய நோக்கம. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் இன்றைக்கு நிதி ஆதாரங்கள் இல்லாத நேரத்தில்கூட உலக வங்கியுடன் தொடர்புகொண்டு எந்த அரசும் எடுக்காத நடவடிக்கையை நாங்கள் எடுத்து, எப்படியாவது பணத்தைப் பெற வேண்டும். இன்னும் இரண்டாண்டுக் காலங்களிலே அடுத்த தேர்தலில் மக்களைச் சந்திக்கின்றபொழுது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் இந்தப் பிரச்சினைகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த மாதிரி திட்டங்களை எடுத்துக்கொண்டு இருக்கிறார். ஆகவே, இந்த அரசு வந்ததற்குப் பின்னாலேதான், எல்லோருக்கும் தெரியும், சாலைகள், பாலங்கள், எல்லா வேலைகளும் நடந்துகொண்டிருக்கின்றன. இருக்கின்ற பிரச்சினை நிதிதான். ஆகவே, இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இந்த ஆண்டு அதை பரிசீலிக்கலாமா என்பதை அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 330, டாக்டர் எஸ். சுந்தரராஜ், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். *330–*

சாஸ்திரி பவன் ஊழியர்கள் வீட்டுவசதி நலச்சங்க வீட்டுமனை வரைபடங்களுக்கு பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒப்புதல் வழங்குதல்.

***23561– டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா –

சாஸ்திரிபவன் ஊழியர்கள் வீட்டுவசதி நலச்சங்கம் கீழ்க்கட்டளை, மடிப்பாக்கம் ஆகிய பகுதிகளில் சங்க உறுப்பினர்களுக்கு வீட்டுமனைகளை வினியோகிக்க தாக்கல் செய்துள்ள வரைபடங்களுக்கான ஒப்புதலை வழங்க சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அரசு அறிவுரை வழங்குமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு அறிவுரை வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாஸ்திரிபவன் வீட்டுவசதி சொசைட்டி அரசு பதிவுப் பெற்ற சங்கம் ஆகும். மத்திய அரசு ஊழியர்களும், மாநில அரசு ஊழியர்களும், பொதுத் துறை நிறுவனங்களின் ஊழியர்களும் அதிலே உறுப்பினர்களாக உள்ளனர். சைதாப்பேட்டை தாலுகாவில், கீழ்கட்டளை கிராமத்தில், 1989-ல் 9 ஏக்கர் நிலங்களை வாங்கி, வேளாண்மைத் துறை மூலம் என்.ஓ.சி. வாங்கி, எம்.எம்.டி.ஏ.,-க்கு அனுப்பப்பட்டு இன்னும் நிலுவையில் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அரசு ஊழியர்களின் நலன் கருதி, எம்.எம்.டி.ஏ., ஒப்புதலை விரைவில் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாஸ்திரிபவன் ஊழியர்கள் வீட்டுவசதி நலச் சங்கம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கோரியுள்ள அனைத்து விவரங்களுக்கும் பதில் அளித்தவுடன், நடைமுறை விதிகளின்படி வீட்டுமன்னை வரைபடங்களுக்கான ஒப்புதலை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வழங்க முடியும்.